செ.வெ. எண்: 125 நாள்: 14–02–2012

# செய்தி

## <u>மாண்புமிகு தமிழக முதலமைச்சர்</u><br><u>அவர்களின் ஆணைக்கிணங்க</u><br><u>மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர்</u><br><u>திரு.செல்லூர் கே.ராஜு அவர்கள் தலைமையில்</u><br><u>அனைத்து மண்டல இணைப்பதிவாளர்கள் மற்றும்</u><br><u>மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளின் தனி அலுவலர்கள் ஆய்வுக் கூட்டம்</u>

*******

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜு அவர்கள் தலைமையில் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கூட்ட அரங்கில் இன்று (14.2.2012) அனைத்து மண்டல இணைப்பதிவாளர்கள் மற்றும் அனைத்து மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளின் தனி அலுவலர்கள் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

அப்போது, இக்கூட்டத்தில் தமிழகத்தில் பல துறைகள் இருந்தாலும் கூட்டுறவுத்துறை மட்டுமே அடித்தட்டு மக்கள் முதல் அனைத்து தரப்பு மக்களுக்கும் தேவையான உதவிகளை செவ்வனே செய்து வருகிறது. இந்த நிதியாண்டு முடிவடைய இன்னும் 45 நாட்கள் எஞ்சியுள்ள நிலையில் சட்டமன்றப் பேரவையில் கூட்டுறவுத்துறை கொள்கை விளக்க குறிப்பில் தெரிவித்த திட்டங்கள், அறிவிக்கப்பட்ட 15 அறிவிப்புகள் மீதான முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்யப்பட்டது.

நடப்பாண்டு (2011–12) விவசாயப் பெருங்குடி மக்களுக்கு குறுகியகால கடனாக பயிர்க்கடன் ரூ.3,000 கோடி அளவிற்கு வழங்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டதில் இதுவரை ரூ.2,821.61 கோடி அளவிற்கு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலம் கடன்கள் வழங்கப்பட்டுள்ளது. இப்பயிர்க்கடனில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின உறுப்பினர்களுக்கு ரூ.600 கோடி அளவிற்கு கடன் வழங்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டதில் ரூ.373.11 கோடி இதுவரை கடன்கள் வழங்கப் பட்டுள்ளது.

முதலீட்டுக் கடனாக ரூ.300 கோடி வழங்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டதில் இதுவரை ரூ.151.60 கோடி அளவிற்கு கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

விவசாயிகளின் விளைபொருள்கள் மீதான தானிய ஈட்டுக் கடன் ரூ.85 கோடி அளவிற்கு கடன் வழங்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டதில் இதுரை ரூ.40.75 கோடி அளவிற்கு கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் வழங்கப்பட்டுள்ளன.

விவசாயப் பெருமக்களுக்கு சிறுபாசனக் கடனாக நடப்பாண்டில் ரூ.50 கோடி வழங்க திட்டமிட்டதில் இதுவரை ரூ.26.10 கோடி கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

மாற்றுத்திறனாளிகளின் வாழ்க்கைத் திறனை உயர்த்துவதற்காக ரூ.15 கோடி அளவிற்கு கடன்கள் வழங்க திட்டமிட்டதில் இதுவரை ரூ.9.99 கோடி அளவிற்கு கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

சிறுவணிகக் கடனாக ரூ.80 கோடி வழங்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டு இதுவரை ரூ.46.57 கோடி அளவிற்கு வழங்கப்பட்டுள்ளன.

125 நகரக் கூட்டுறவு வங்கிகள் மூலமாக அனைத்து வகை கடன்கள் ரூ.5,920 கோடி அளவிற்கு வழங்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டதில் இதுவரை ரூ.4,377.36 கோடி அளவிற்கு கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

தொடக்க கூட்டுறவு வேளாண்மை ஊரக வளர்ச்சி வங்கிகள் மூலம் நடப்பாண்டில் நகைக்கடனாக ரூ.1,000 கோடி அளவிற்கு வழங்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டதில் இதுவரை ரூ.676.69 கோடி அளவிற்கு நகைக்கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள், நகர கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலமாக சுய உதவிக் குழுக்களுக்கு நடப்பாண்டில் ரூ.170 கோடி அளவிற்கு கடன் வழங்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டதில் இதுவரை ரூ.111.50 கோடி அளவிற்கு கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

அனைத்து கூட்டுறவு வங்கிகள் மற்றும் சங்கங்களில் வைப்பீட்டினை அதிகரிக்க மேற்கொண்ட பல்வேறு முயற்சிகளின் காரணமாக தற்பொழுது மொத்த வைப்பீடு ரூ.23,081 கோடி அளவிற்கு உயர்ந்து சாதனை படைத்துள்ளது.

பொதுவிநியோகத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதில் கூட்டுறவுச் சங்கங்களும், கூட்டுறவு நிறுவனங்களும் பெரும்பங்கு ஆற்றி வருகின்றன. நியாயவிலைக் கடைகளை பொருத்தமட்டில் உரிய நேரத்தில் திறந்து வைக்க அறிவுறுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. குடும்ப அட்டைதாரர்களின் விருப்பத்தின் பேரிலும், அவர்களின் தேவையின் அடிப்படையிலும் மட்டுமே கட்டுப்பாடற்ற பொருட்களை வினியோகிக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மார்ச் 2012க்குள் கூட்டுறவுத்துறையின் மூலம் நிர்ணயிக்கப்பட்ட பல்வேறுவகையான கடன்கள் உள்ளிட்ட அனைத்து வகையான குறியீடுகளையும் எய்திடவேண்டும் என்றும், பொதுவிநியோகத்திட்டத்தின் மூலம் வழங்கப்படும் அத்தியாவசியப் பொருட்கள் பொதுமக்களுக்கு தங்குதடையின்றி எந்தவித புகாருக்கும் இடம் அளிக்காமல் வழங்கிட உரிய நடவடிக்கை மேற்கொள்ள அதிகாரிகளை கேட்டுக்கொண்டார்.

இக்கூட்டத்தில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை செயலாளர் திருமதி எம்.பி.நிர்மலா, இ.ஆ.ப., கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் திரு.ப.அண்ணாமலை, இ.ஆ.ப., கூடுதல் பதிவாளர்கள் திரு.க.பு.பெ.பன்னீர்செல்வன், திரு.இரா.ராஜேந்திரன், திரு.அ.சங்கரலிங்கம், திரு.இரா.கார்த்திகேயன், திரு.ம.ப.சிவன் அருள் மற்றும் மண்டல இணைப்பதிவாளர்கள், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளின் தனி அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**